

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 123வது பிறந்த நாளை முன்னிட்டு குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவச் சிலைக்கு கழகப் பொருளாளரும், கழக மக்களவைக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு. அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். அருகில் குன்றத்தூர் நகர மன்றத் தலைவர் கோ.சத்திய மூர்த்தி மற்றும் நகர கழக நிர்வாகிகள் உள்ளனர்.

விருதுநகர் மாவட்டம்:

திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார்! எஸ்.நவாஸ்கனி எம்.பி. முன்னிலை!

விருதுநகர் ஜூலை, 16 - உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்தினை நிதி,சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று (15.07.2025) உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்தினை கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, விருதுநகர் மாவட்டம், திருச்சுழி ஊராட்சி ஒன்றியம், ஆலடிப்பட்டி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், நடைபெற்ற முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். நவாஸ்கனி அவர்கள் முன்னிலையில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தொடங்கி வைத்தார்.

பின்னர் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:

பேரறிஞர் அண்ணா அவர்கள் மக்கள் பிரதிநிதியாக இருக்கக்கூடியவர்கள், மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கக்கூடியவர்கள், முதலில் நீங்கள் மக்களிடத்தில் செல்லுங்கள். மக்களிடத்தில் இருந்து துவங்குங்கள். மக்கள் என்ன வைத்திருக்கிறார்களோ அவர்களிடத்தில் இருந்து உங்கள் திட்டங்களை தீட்டுங்கள். அவர்களோடு இணைந்து பயணம் செய்யுங்கள்.அவர்களுடைய குறைகளை கேளுங்கள் என்று கூறினார்கள்.

அந்த வழியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு மக்களுடைய பிரச்சினைகளை ஒவ்வொரு ஊராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளிலும் இருக்கக்கூடிய கிராமங்களில் உங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை நேரடியாக அரசினுடைய அத்தனை துறைகளும் ஒரே இடத்திற்கு வந்து உங்கள் குறைகளை கேட்டு அவற்றை தீர்க்க க்கூடிய முகம்களை தமிழ்நாடு முழுவதும் இன்று நடத்திக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 10,000 முகாம்கள் நடைபெற உள்ளது. உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் 349 சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது. இம் முகாம்கள் கிராமப்பகுதியான 11 ஊராட்சி ஒன்றிய பகுதியில் 229 முகாம்களும், நகரப் பகுதிகளான சிவகாசி மாநகராட்சி, 5 நகராட்சிகள் மற்றும் 9 பேரூராட்சி பகுதிகளில் 120 முகாம்கள் என மொத்தம் 349 முகாம்கள் நடைபெற உள்ளது.

இம்முகாம்களில் நகரப்பகுதிகளில் 13 துறைகள் மூலம் 43 சேவைகளும் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள் மூலம் 46 சேவைகளும் அளிக்கப்படுகிறது.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மக்களின் கருத்துக்களை எல்லாம் உள்வாங்கி கொண்டு, அவர்களின் குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து, தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ ஒரு லட்சம் தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் முகாம் நடைபெறும் பகுதிகளில் தன்னார்வலர்கள் மூலம் துண்டுப் பிரசுரம் (யேஅரிடநவள) மற்றும் விண்ணப்பங்கள் பொது மக்களுக்கு அளிக்கப்பட்டு,; பொதுமக்களிடம் கலந்துரையாடி, அவர்களுக்கு தேவையான மற்றும் தேவைப்படும் திட்டங்கள் குறித்து எடுத்து ரைத்து முகாமில் கலந்து கொண்டு பயனடைய உரிய விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டு வருகிறது.

ஆலடிப்பட்டியை சுற்றியுள்ள ஊர்கள் அனைத்தும் சேர்ந்து சுமார் ஏறத்தாழ 1500 குடும்பங்கள் இருக்கின்றன. இந்;த குடும்பங்கள் எல்லாம் அவர்களுடைய கோரிக்கையை ஒரே இடத்தில் தருவதற்காக தான் இந்த முகாம் நடைபெறுகிறது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெற தகுதியுள்ள விடுபட்ட மகளிர்கள் இம்முகாமிற்கு சென்று விண்ணப்பங்கள் அளித்தால் அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இம்முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு 45நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும். மேலும், மக்கள் அனைவரும் தங்களுடைய குறைகளை இந்த முகாமில் தெரிவித்து பயன்பெறலாம். இந்த முகாமில் நீங்கள் நன்றாக உபயோகப்படுத்தும்படி நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உங்களுடன் ஸ்டாலின் என்ற சிறப்பு முகாமானது இன்று கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரம் நகராட்சியில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மகத்தான திட்டத்தின் முன்னாடியாக மக்களுடன் முதல்வர் முகாம் செயல்படுத்தப்பட்டு வந்தது. அதில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து, மக்கள் இருக்கும் இடத்திற்கு சென்று குறைகளை கேட்டறிந்து அதனை சரிசெய்யும் அளவிற்கான சிறப்பான திட்டமாக உள்ளது.

அந்த வகையில் விருதுநகர் மாவட்டத்தில், உங்களுடன் ஸ்டாலின் என்ற சிறப்பு முகாம்கள் ஜீலை 15 ஆம் தேதி முதல் துவங்கி நவம்பர் 7 ஆம் தேதி வரை 349 முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் வரும் விண்ணப்பங்களை சரியான முறையில் விசாரணை செய்து தீர்வு காண உள்ளனர். இதில் முக்கிய சிறப்பு என்னவென்றால் தன்னார்வலர்கள் இந்த உங்களுடன் ஸ்டாலின் முகாம் பற்றிய கருத்துக்களையும், முகாமில் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளை முகாம் நடைபெறுவருதற்கு முன்பாகவே வீடு, வீடாக சென்று மக்களின் குறைகளை கேட்டறிந்து விண்ணப்பங்களை கொடுத்துள்ளார்கள். மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் பெண்கள் விண்ண ப்பங்களை அளித்து பயன்பெற வேண்டும் எனவும்,

இம்முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு 45நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும். எனவே, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பொதுமக்கள் உங்கள் வீட்டின் அருகிலுள்ள முகாம்களுக்கு சென்று மனுவை அளித்து தங்களின் குறைகளுக்கு தீர்வு காண இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தனித் துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத் திட்டம்) காளிமுத்து, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மைக்கேல் ஜார்ஜ் ஆண்டனி, அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் (பொ) ரமேஷ், சத்துணவு திட்டத்தின் நேர்முக உதவியாளர் ஜெகதீசன், செயற்பொறியாளர் திருமதி வெண்ணிலா, உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புழல் எம். நாராயணன் தலைமையில்

மாதவரம் 17வது வட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' தீவிர உறுப்பினர் சேர்க்கை !

கே. கருணாகரன் முன்னிலையில் தொகுதிப் பார்வையாளர் டாக்டர் ஜெ. அருண் ஆய்வு

சென்னை, ஜூலை 16- சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் தீவிர உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்று வருகிறது.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டத்திற்குட்பட்ட 145, 146 ,147, 164, 165 ஆகிய பாகங்களில் அடங்கிய வடபெரும்பாக்கம், சின்ன தோப்பு, விநாயகபுரம், செட்டிமேடு, வி எஸ் மணி நகர், கொசப்பூர், தியாகி விஸ்வநாததாஸ் நகர், டாக்டர் அம்பேத்கர் நகர்,தீயம்பாக்கம், பெரியார் நகர், காந்தி நகர், அரியலூர் ஆகிய பகுதிகளில் உள்ள அனைத்து இல்லங்களிலும் கழகத்தினர் நேரடியாக சென்று உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில், வட்ட கழக நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி.பாலாஜி, வி. பார்த்தசாரதி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் டி. வினோத், ஜி. ராஜ்குமார், எஸ். நாகராஜ்,பாக முகவர்கள் டி. திவாகர், வி. சுமிர், ஜி.கார்த்திக், எம். மோகன் ராஜ் என்கின்ற மைக்கேல், ஆகியோர் உறுப்பினர் சேர்க்கை முகாமில் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வீடு வீடாக கையொப்பம் பெற்று கழகத்தினரையும் புதிதாக இணைபவர்களையும் சேர்த்து வருகிறார்கள்.

இப்பணிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் மாதவரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெ. அருண் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு துரிதப்படுத்தினார்.

பாக உறுப்பினர்கள் பூபாலன், இ சுதர்சன் எம். ஜான்சன், எஸ். ஜோசப், அன்பரசு,கொசப்பூர் விஷ்ணு, ராகேஷ், கார்த்திக், கமலநாதன், பி. செந்தில், ராஜாத்தி, சரஸ்வதி, சாந்தி, பார்வதி எம் என். தளபதி, ஜி முனிவேல் உள்ளிட்ட பலர் இப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

17வது வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் நிர்ணயித்த 30 சதவீதம் வாக்குகளை 5 பாகங்களிலும் பூர்த்தி செய்து, மேலும் உறுப்பினர் சேர்க்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

நிர்ணயத்தை இலக்கை தாண்டி 30 சதவீதத்திற்கும் மேல் உறுப்பினர்களை சேர்த்து வரும் 17 வது வட்ட நிர்வாகிகளுக்கும், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், செயல்வீரர்கள் அனைவருக்கும் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தனது வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவித்துக் கொண்டார்.

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வார்டுக்கு உட்பட்ட அஷ்டலட்சுமி நகர் 5 வது தெருவில் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான குடிநீருடன் கழிவு நீர் கலந்து வருகிறது என்ற புகாரின் அடிப்படையில் பழுதடைந்த மெட்ரோ குடிநீர் பிளாஸ்டிக் HDPE குழாயினை மாற்றி புதிய துருப்பிடிக்காத இரும்பு D.I குழாயினை ரூபாய் 4.87 கோடி மதிப்பீட்டில் மாற்றி அமைக்கும் பணியினை மாமன்ற உறுப்பினர் ரமணிமாதவன் தலைமையில் மண்டலக் குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி துவக்கி வைத்தார். இதில் வட்டச் செயலாளர் எஸ்.ஜி.மாதவன் மற்றும் வட்டத்திற்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், பல்வேறு நிர்வாகிகள், பொதுநல சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

உலகைப் படித்த ஒப்பற்ற மேதை!



கொம்புத்தேன் பேச்சல்ல, எளிய பாணி!
கோமளப்பூஞ் சிவப்பல்ல, கருப்பு மேனி!
தும்பைப்பூக் கதராடை! முழங்கா லைப்போய்த்
தொடுகின்ற மழைக்கைகள்! படர்ந்த நெற்றி!
தெம்புக்குத் தெம்பூட்டும் நிமிர்ந்த திண்டோள்!
தேசத்தை நினைந்துருகும் வெளிச்சக் கண்கள்!
கம்பீரத் திருத்தோற்றம்! ஏழை நேசர்!
"கல்விக்கண் திறந்தமகன்" காம ராசர்!

கார்முகிலாய் பொதுவாழ்வில் மக்கள் மீது
கருணைமழை பொழிந்தவர்நம் காம ராசர்!
சீர்மிகுந்த ஆட்சிசெய்த காம ராசர்!
சிறைக்கொடுமை அனுபவித்த காம ராசர்!
வீரர்களைப் போற்றிநின்ற காம ராசர்!
விடுதலைப்போர்த் தியாகியன்றோ காம ராசர்!
பார்புகழும் பெருந்தலைவர் காம ராசர்!
" படிக்காத மேதை"எங்கள் காம ராசர்!

நதிநீரைச் சேகரிக்க அணைகள் கட்டி
நாட்டுமக்கள் துயர்தீர்த்த காம ராசர்!
புதியபல பாலங்கள் கட்டித் தந்து
போக்குவரத்து இடர்தீர்த்த காம ராசர்!
"மதியஉண வுத்திட்ட" அன்னம் இட்டு
மாணவரின் பசிதீர்த்த காம ராசர்!
முதலமைச்சர் பொறுப்புக்கே பெருமை சேர்த்த
"முதல், முதல் அமைச்சர்" எங்கள் காம ராசர்!

அருள்மிகுந்தார் இவர்தந்தை குமார சாமி!
அன்புத்தாய் சிவகாமி! இவர்கள் பெற்றுத்
தரமகிழ்ந்து சிலிர்த்ததுநம் அன்னை பூமி!
தலைவர்களே விருதுகளைப் பெறுவார்! ஆனால்
விருதுநகர் "நம்காம ராச ரையே"
விருதாகப் பெற்றநக ரன்றோ! இந்தப்
பெருமை,புகழ் குலுக்கலிலே கிடைத்த ஒன்றோ?
பேருழைப்புத் தியாகத்தின் பரிசே யன்றோ!

பனையேறும் குடும்பத்தில் பிறந்தார்! ஆனால்
பலர்ஏறி, மேல்உயர ஏணி யானார்!
மனைமக்கள் இவர்வாழ்வில் இல்லை! நாட்டு
மக்களைக் கரைசேர்க்கும் தோணி யானார்!
சுனைநீராய் பயன்பட்டுத் தொண்டு செய்தார்!
சுதந்திர நெருப்பில், நெய் யானார்! எள்ளின்
முனையேனும் சுயநலம்பார்த் தாரா? கண்கள்
மூடும்வரை பிறர்க்கென்றே வாழ்ந்து போனார்!

ஓலையிட்ட குடிசைகளின் பிள்ளை கட்கும்
உணவளித்த பெருந்தகை!இன் றிருந்தால், கல்விச்
சாலையெங்கும் யுகப்புரட்சி செய்யும் எங்கள்
"தளபதியை" தமிழ்நாட்டின் பள்ளி யெங்கும்
"காலைஉண வுத்திட்டம்" கொண்டு வந்த
கலைஞரின் திருமகனை உச்சி மோந்து
மாலையிட்டு அரவணைத்தே மகிழ்ந்தி ருப்பார்!
"மகனே!நீ வாழ்க!"வென நெகிழ்ந்தி ருப்பார்!

படிக்காத மேதை!இவர் போல்உ ணர்ந்துப்
படித்தவர்கள் யாருமில்லை உலகை! மோகம்
பிடிக்காத வர்!இவர்போல் தேச பக்தி
பிடித்தவர்கள் யாருமில்லை! செல்வம் சேர்க்கத்
துடிக்காத வர்!இவர்போல் விடுத லைக்குத்
துடித்தவர்கள் யாருமில்லை! தேநீர் கூட
குடிக்காத மனிதர்!இவர் போல்க ரைத்துக்
குடித்தவர்கள் அரசியலை, எவரும் இல்லை!

விளைத்தெங்கும் இவர்சொத்து சேர்க்க வில்லை!
வெளிநாட்டில் பணம்போட்டுக் குவிக்க வில்லை!
வளைத்தெங்கும் மாளிகைகள் கட்ட வில்லை!
வாடகைக்கே குடியிருந்தார் வாழ்நா ளெல்லாம்!

இளைத்துப்போ னார்!இதயம் வெடித்துப் போனார்!
இந்தியா "நெருக்கடியால்" இருண்ட நேரம்
களைத்துப்போ னார்!ஆமாம், "கலைஞர்" கைமேல்
கைவைத்துத் "தாய்நாட்டைக் காப்பாற்" றென்றார்!

பூவைத்து, மலர்வளையம் வைத்துக் கண்ணீர்
பொழிந்துவிட்டுச் சிலர்சென்றார்! புகழு டம்பில்
மூவர்ணக் கொடிபோட்டுப் போர்த்தி விட்டு
" முடிந்ததுநம் கடமை"யெனச் சிலபேர் சென்றார்!
தாய்வைத்த இதயத்தைக் கொண்டி லங்கும்
"தலைவர்நம் கலைஞர்"தாம், உண்மை யான
நேயத்தில் கிண்டியிலே "காம ராசர்
நினைவிடத்தை" உருவாக்கிப் பெருமை சேர்த்தார்!

வரும்தலைவர் போம்தலைவர் நாட்டில் உண்டு!
வாழ்ந்தசுவ டில்லாத தலைவர் உண்டு!
தரும்தலைவர், பெறும்தலைவர் அதிகம் உண்டு!
தலைவர்களில் இந்நாடு வணங்கிப் போற்றும்
"பெருந்தலைவர்" உயர்காம ராசர் அன்றோ!
பிறர்க்காக வாழாமல், உழைத்தி டாமல்
திரிந்தலைவர் சிலர்தலைவர் ஆவ தற்கே!
தெப்பமெல்லாம் கப்பலென்றால் ஒப்பு வோமா?

ஏழ்மைநிறை குடும்பத்தின் பிள்ளை யாகி
இளம்வயதில் தந்தையினை இழந்து வாடி
ஊழ்வினைஎன் றிருக்காமல் தியாகம் செய்தே
உழைத்துயர்ந்து தமிழ்நாட்டின் முதல்வ ராகித்
தாழ்வதற்றும் விடுதலைப்போர்க் "கர்ம வீரர்"
தலைவர்களை உருவாக்கும் தலைவர் ஆகி
வாழ்வைஇந்த நாட்டுக்கே அர்ப்ப ணித்து
வருங்காலத் தலைமுறைக்கும் வரலா றானார்!

காற்றாண்டு கொண்டிருக்கும் இவ்வை யத்தின்
கல்வெட்டில் சிலர்பெயரே நிலைத்தி ருக்கும்!
நூற்றாண்டு கள்கடந்தும் காம ராசர்
நூலகத்தில் மட்டுமல்ல, தாய கத்தில்
மாற்றாரின் நெஞ்சகத்தும் குடிகொண் டுள்ளார்!
மகத்தான பெருந்தலைவர் பிறந்த நாளில்
ஏற்றுக்கொள் வோம்சபதம்! "மனித நேயம்"
இறுதிவரை வெற்றிபெற உறுதி ஏற்போம்!

... கவிச்சுடர்
கவிதைப்பித்தன்

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி, ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் நடைபெற்று வரும் தீவிர உறுப்பினர் சேர்க்கை பணிகளை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெ.அருண் பார்வையிட்டு துரிதப்படுத்தினார். 17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், வட்ட நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி. பாலாஜி உள்ளிட்ட பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் உடன் உள்ளனர்.